# BHARATHIDASAN UNIVERSITY
## CENTRE FOR DISTANCE EDUCATION

Palkalaiperur
Tiruchirappalli – 620 024
Tamil Nadu, India

**Dr. P.K. Manoharan**
**Director**

23.6.2016

அன்பிற்கினிய பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர் அவர்கட்கு,

பாரதிதாசன் பல்கலைக்கழக தொலைக்கல்வி மையத்தின் 2016-17ஆம் கல்வியாண்டுக்கான புத்தாண்டு வாழ்த்துக்கள்.

மாண்பமை துணைவேந்தர் மற்றும் பதிவாளர் அவர்களின் மேலான வழிகாட்டுதலின் கீழ் இக்கல்வியாண்டில் இப்பல்கலைக்கழக தொலைக்கல்வியில் மாணவர் சேர்க்கையினை அதிகப்படுத்தும் வகையில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர் சேர்க்கை தொடர்பான விளம்பரம் 'தினமணி' நாளிதழில் 15.5.2016 ஞாயிற்றுக்கிழமை அன்றும், 'தி இந்து' ஆங்கில நாளிதழில் 22.5.2016 ஞாயிற்றுக்கிழமை அன்றும் வெளியிடப்பட்டது. அன்றைய தினமே ஆன்லைனில் விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

அனைத்து பாடப்பிரிவுகளுக்குமான ஒருங்கிணைந்த விண்ணப்பப் படிவத்தோடு கூடிய விவரக்குறிப்பேடு அனைத்து பயிற்சி மையங்களுக்கும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பயிற்சி மையத்தின் கல்லூரி முகவரியோடு கூடிய விளம்பர போர்டுகள் மற்றும் பேனர்கள் தொலைக்கல்வி மையத்தால் தயாரிக்கப்பட்டு, முதற்கட்டமாக இரண்டு 'பிளக்ஸ் போர்டு/பேனர்கள்' கல்லூரி வளாகத்திலும், மேலும் இரண்டு பேனர்கள் கல்லூரியைச் சுற்றியுள்ள பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

22.6.2016 முதல் இரண்டு மாத காலத்திற்கு (Alternate Days) திருச்சி ரெயின்போ பண்பலை வானொலியில் காலை மணி 6.55க்கும் மாலை மணி 4.02க்கும், கொடைக்கானல் ரெயின்போ பண்பலை வானொலியில் பிற்பகல் 3.02க்கும் மாணவர் சேர்க்கை அறிவிப்பு ஒலிபரப்பாகி வருகிறது.

திருச்சி பண்பலை வானொலியின் ஒலிபரப்பு திருச்சி, பெரம்பலூர், கரூர், தஞ்சாவூர், நாமக்கல், புதுக்கோட்டை, அரியலூர் ஆகிய 7 மாவட்டங்களையும், கொடைக்கானல் பண்பலை வானொலி பெரம்பலூர், அரியலூர், கரூர், தஞ்சாவூர், நாகை, புதுக்கோட்டை, திருவாரூர், திண்டுக்கல், தேனி, மதுரை, நீலகிரி, ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி ஆகிய 18 மாவட்டங்களையும் சென்றடையக்கூடியதாகும்.

மைய ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளூர் கேபிள் தொலைக்காட்சி 'Scrolling News' வாயிலாகவும், பேருந்து நிலையங்களில் விளம்பரம் செய்யும் ஏஜென்டுகளை அணுகி அவர்கள் மூலமாகவும், பல்கலைக்கழகத்தின் அனுமதியோடு, விளம்பரம் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதற்குண்டான செலவை (ஆண்டுக்கு ரூ.5000க்கு மிகாமல்) பல்கலைக்கழகம் ஏற்றுக் கொள்ளும்.

. . . . 2

*cde.admissions@bdu.ac.in*
*pkmanoharanbdu@gmail.com*
*www.bdu.ac.in/cde*
*Ph: 0431 20407077*
*Mobile : +91 83001 74010*

விண்ணப்பப் படிவ விற்பனை மற்றும் மாணவர் சேர்க்கைக்கான ஊக்கத்தொகை ஒருங்கிணைப்பாளர்களுக்கு கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தை தவிர்க்கும் வகையில் இவ்வாண்டு ஊக்கத்தொகையை விண்ணப்ப படிவங்கள் விற்ற தொகையிலிருந்து எடுத்துக் கொண்டு மீதி தொகையை அனுப்பி வைப்பதற்கு மாண்பமை துணைவேந்தரிடம் அனுமதி வேண்டப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்பாளர்களும் மாணவர்களும் எல்லா நேரங்களிலும் தொலைக்கல்வி மையத்தோடு தொடர்பு கொள்ளும் வகையில் வழக்கமான தொலைபேசி எண்களோடு மூன்று செல்போன் எண்களும் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| Director | : | 83001 74010 |
| Admissions & Academic | : | 83001 84010 |
| Examinations & Results | : | 83001 84050 |

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையன்று விண்ணப்பப் படிவ விற்பனை மற்றும் மாணவர் சேர்க்கை குறித்த விவரங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாணவர் சேர்க்கையின்போது விண்ணப்பத்துடன் தேவையான அனைத்து சான்றிதழ்களின் நகல்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதையும், இளநிலை, முதுநிலை மற்றும் MBA, MCA பாடப்பிரிவுகளில் சேருவதற்கு பல்கலைக்கழகம் நிர்ணயித்துள்ள கல்வித் தகுதி சரியாக உள்ளதா என்பதையும் சரிபார்த்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

மாணாக்கர்கள் எவரேனும் சேர்க்கையின் போது முழுக் கட்டணத்தையும் ஒரே நேரத்தில் செலுத்துவதில் சிரமம் இருப்பதாகத் தெரிவித்தால் தாங்களோ அல்லது அந்த மாணவ மாணவியரோ தொலைக்கல்வி மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

மாணவர் சேர்க்கை அதிகமாக நடைபெறக் கூடிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில், மாணவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்து வைக்கும் வகையில், மைய ஒருங்கிணைப்பாளர்கள் வேண்டுகோளின் பேரில், தொலைக்கல்வி மைய அலுவலர்கள் அனுப்பி வைக்கப்படுவர்.

ஒருங்கிணைப்பாளர்கள் தங்களது செல்போன் எண்ணை மாற்றம் செய்தால் உடனே தொலைக்கல்வி மையத்திற்குப் புதிய எண்ணைத் தெரிவிக்கவும்.

விவரக் குறிப்பேட்டில் உள்ள பாடப் பிரிவுகளில் மட்டுமே மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டும். மாற்றுச் சேர்க்கை (Transfer Admission) மூலம் சேர விரும்பும் மாணவர்களை தொலைக்கல்வி மையத்திற்கு நேரில் வந்து சேர்க்கை பெறுமாறு அறிவுறுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நிறைவாக... பல்கலைக்கழக தொலைக்கல்வி மையத்தின் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில், மைய ஒருங்கிணைப்பாளராகிய தாங்களும், தங்களுக்குக் கீழ் பணியாற்றும் அனைவரும் தங்களது மேலான ஒத்துழைப்பை நல்கி மாணவர் சேர்க்கையினை அதிகரிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமாய் அன்போடு வேண்டுகிறோம்.

இயக்குநர்